Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹு பங்குனி ௴ 13 ௳ புதன்கிழமை [27-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 120

# இராணுவ நடவடிக்கைகள் மன்னாரில் நேற்று ஆரம்பம்!

## 8 பட்டாலியன்கள் ஈடுபடுகின்றனவாம்

கொழும்பு, மார்ச் 27

**மன்னார் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படைகள் பெரும் இராணுவ நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்தன என்று கொழும்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.**

திட்டமிட்டு இருந்தகற்கு முன்னதாகவே — திடீரென ஐந்தத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்தே—இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

இதற்கிடையில்—

இந்நடவடிக்கையில் இராணுவத்தின் எட்டு பட்டாலியன்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும்—

வவுனியாவிலிருந்து வடக்கே சென்று கொண்டிருக்கும் இராணுவத்தினருடன் சேர்ந்துகொள்வதற்காக மன்னாரில் இருந்து கிழக்கு நோக்கிபெருமளவில்துருப்புக்கள் செல்வதாகவும்—

அவர்களுக்கு ஹெலிகளும் விமானங்களும் வான்வழிப் பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் ஊர்ஜிதப்படுத்தப் படாத செய்திகள் தெரிவிப்பதாக பி. பி. .ஸி அறிவித்தது. [ஒ-எ-5]

## பிரேமாவின் அழைப்பு; புலிகள் நிராகரிப்பு!

பாரிஸ், மார்ச் 27

வடக்கு —கிழக்குச் சண்டையை நிறுத்தும் வகையில் மாகாண சபைக்கு புதிய தேர்தலை நடத்தப்போவதாகவும் அதில் பங்குபற்றும்படியும் ஜனாதிபதி பிரேமதாஸா விடுத்த அழைப்பை ஏற்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்து விட்டனர். வெரித்தாஸ் வானொலி இவ்வாறு தெரிவித்தது.

தேர்தல் மூலம் வாக்களிப்பதற்கு முன்பதாக சுயாட்சி மற்றும் சுயநிர்ணயம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

நடைமுறையற்ற கடுமையான மற்றும் அநீதியான நிபந்தனைகள் மூலம் இலங்கை அரசு பேச்சுவார்த்தையைத் திணிக்கமுயல்கிறது என்று விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர் பாரிஸில் இருந்து தொலைபேசி மூலம் தெரிவித்தார் என்றும் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

### 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை:

## 98 பரீட்சை நிலையங்களில் 14,000மாணவர் தோற்றுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 27

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள்—மதிப்பீட்டு வேலைக்காக—அடுத்த இருதினங்களுக்குள்—கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

யாழ். மாவட்டத்துக்குரிய பரீட்சை வினாத் தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன என்பது தெரிந்ததே.

இருவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் யாழ். மாவட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. தங்கராஜா கொழும்பிலிருந்து வினாத்தாள்களை இங்கு கொண்டுவந்து சேர்த்துள்ளார்.

திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை 98 பரீட்சை நிலையங்களில் 14 ஆயிரம் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவர் என்று உதவிக் கல்விப் பணிப்பாளர் உதயனுக்குத் தெரிவித்தார். [ஒ-5]

## செயலகத்துக்குப் பகலில் விளக்குடன் வந்த நபர்!

யாழ்ப்பாணம், மார்ச் 27

**யாழ்ப்பாணம் செயலகத்திற்கு ஒருவர் நேற்று ''ஹரிக்கேன்'' விளக்குடன் [லாந்தருடன்] வந்தார்!**

அவ்வாறு வந்தவர் அங்கு பணிபுரியும் அதிகாரியோ அல்லது ஊழியரோ அல்லர்.

மத்தியான வேளையில், சூரியன் தீயென எரிந்து கொண்டிருந்த வேளையில், கையில் விளக்குடன் வந்தவர் சங்கானையைச் சேர்ந்த பொதுமகன் ஒருவராவார். அங்கிருந்து கொளுத்தும் வெயிலில் சைக்கிளில் வந்திறங்கிய அந்த நடுத்தர வயதுக்காரர் அவசர அவசரமாக, தான் கொண்டு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலை கண்ணியில் இராணுவ டிரக் சேதம்

திருகோணமலைமாவட்டம் பாலம்போட்டாறு முகாமில் இருந்து வந்த இராணுவ டிரக் ஒன்று நேற்றுக்காலை 8.05 மணிளவில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி முற்றாகச் சேதமானது.

முகாமில் இருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் – கொழும்பு வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது.

இச்சம்பவத்தில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு குறித்து விவரமான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை—

திருகோணமலை மாவட்டம், தம்பலகமம் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஒ-எ]

### அக்கரைப்பற்றில்

## முஸ்லிம் ஊர்காவலரால் தமிழர் கடத்தப்படுகின்றனர்

கொழும்பு, மார்ச் 27

அக்கரைப்பற்றுப் பகுதியில் இருபதுக்கும் அதிகமான தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை முஸ்லிம் ஊர்காவற் படையினரே கடத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்டவர்களில் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் கடந்த ஞாயிறு நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் எதிரொலியாகவே இந்தக் கடத்தல்கள் இடம்பெறுவதாகக் கருதப்படுகிறது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டில் இருந்து பதினெட்டாக உயர்ந்துள்ளது. [அ-5]

## 7 அப்பாவித் தமிழர்கள் திருமலையில் படுகொலை!

யாழ்ப்பாணம், மார்ச் 27

திருகோணமலை மாவட்டம் கட்டைப்பறிச்சான் முகாம் இராணுவத்தினர் கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் ஏழு அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கடந்த 13 ஆம் திகதி மட்டப்புக்களி, இலக்கந்தை, நல்லூர் ஆகிய கிராமங்களைச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



விளக்கம் தெரிஞ்சவர் விளக்கோடு வந்து வேலையை முடிச்சிட்டார்...... சபாஷ்!

## மன்னார் ஆயர் தாக்கப்பட்டதற்கு யாழ். குருமார் ஏகோபித்த கண்டனம்

குருநகர். மார்ச் 27

மன்னார் ஆயர் அதி. வந். கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, வவுனியாவில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்டதை, யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த மத குருமார் ஏகோபித்து வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதற்கென நேற்று நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றுக் காலை 9-30 மணிக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் இராஜ்தீவி [மனோகரன் – உடுப்பிட்டி, புத்தளம்] வீரமரணமடைந்தார். [ஒ]

## கைதான எதிரணி எம். பி. பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, மார்ச் 27

அனுராதபுரம் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை கடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சுதந்திரக் கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நீர்கொழும்பு நீதிவானால் சில தினங்களுக்கு முன் சரீரப் பிணையில் விடப்பட்டார்.

அவருடன் கைதான ஏனைய ஆறு பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

திரு. பெர்னாண்டோ புள்ளே மீதான விசாரணை தொடர்பாக பொலீஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளனர்.

கடத்தப்பட்டதாககூறப்படும் பிரதேச சபை உறுப்பினர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று தருவதாகக் கூறி

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கம் - 2

# சின்னஞ்சிறு விளம்பரம்

### சோதிடமாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16179]

### A/L பொருளியல்

A/L 91, 92 வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் 4 Pm. ஆசிரியர் எஸ். சரவணபவான் B. A. [Hons] Fan Institute, பண்டத்தரிப்பு. [16110]

### SLEAS

SLEAS - பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச்சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா, எம். ஏ [16184]

### கலர்ப்பிலிம் பிறிண்டிங்

கலர்ப் பிலிம் சுருள்கள் விரைவாகவும், குறைந்த செலவிலும் பிறிண்டிங் செய்து தரப்படும். Quick Photo மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம், கே. கே. எஸ் வீதி, தெல்லிப்பழை. [16109]

### மணமகள் தேவை

யாழ் இந்து வயது 29 ஆங்கில ஆசிரியருக்கு சைவ போசனமுள்ள படித்த அழகிய மணமகள் தேவை. சடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 193, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [16148]

### மணமகன் தேவை

இந்துமத வயது 28 நட்சத்திரம் மகம், செவ்வாய் தோஷமற்ற கொழும்பில் பொறியியலாளராக [பேராதனை] கடமை புரியும் அழகான மணமகளுக்கு அதற்குத் தகுதியான அல்லது சிறிது படிப்புக் குறைந்த [வெளிநாட்டு படிப்பு தவிர்ந்த] மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். உடன் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 200, C/o உதயன். [3894]

### A/L பொருளியல்

1992 புதிய பாடத்திட்டத்திற்கமைவான மாணவர் பயிற்சிக் கைநூல் வெளிவந்து விட்டது. ஆக்கியோன்: V கருணாகரன் B. A. Hons வியாபாரிகள், மாணவ மன்றத்தினர் சழிவு விலையில் பெறலாம். தொடர்பு: 215, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16226]

### வினாத்தாள் விற்பனை

ஆண்டு 5 [புலமைப்பரிசில் பரீட்சைக்கான] கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் [புள்ளியிடும் திட்டம் விடைகளுடன்] விற்பனைக்குண்டு. Bond Institutes 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [16224]

### வல்லாரை குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த Gotukola Capsules கிடைக்கும் இடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். [3896]

---

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்: 09 - 09 - 1936
விண்ணில்: 23 - 03 - 1991

### பேராசிரியர் சோ. கந்தையா

B. Sc. [Hons]. Ph. D. [London]

விவசாயபீட பீடாதிபதியும், முன்னாள் தாவரவியற் துறைத்தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும்

விவசாயபீட விற்பன்னராய் வந்து
விரைவாகத் துறைவளர்ப்பீர் என்று வீற்றி-ருந்தோம்.
அவமாக மரணம் அணைத்து விட்டதென்ற
ஆற்றொணாத் துயரில் அஞ்சலி செலுத்து-கின்றோம்.

யாழ். மத்திய கல்லூரியின்
உயர்தர விஞ்ஞான மாணவர் மன்றம்.

[16232]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 - 10 - 1936
மறைவு: 27 - 03 1989
திதி: 04 - 04 - 1991

### அமரர் பொ. பூபாலசிங்கம்

[கட்டட ஒப்பந்தகாரரும், ஹாட்வெயர் உரிமையாளரும் - தெல்லிப்பழை]

என் இதய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
எம்மை வழி நடத்திய அன்புத் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

D. R. O ஒழுங்கை,
தெல்லிப்பழை.

[16186]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் துரையப்பா இராசலிங்கம்

மலர்வு: 07 08 - 1934
உதிர்வு: 25 - 02 1991

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் அந்தி பகலாய் அயராது உழைத்து எம்மை வாழவைத்து ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்ற அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!

லிங்கவாசா. மனைவி, மைத்துனர்மார்,
கே. கே. எஸ் வீதி, மருமக்கள், மருமகள்மார்.
இணுவில் கிழக்கு,
இணுவில்.

[16212]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 12 — 1901
மறைவு: 26 — 02 — 1991



### அமரர் அம்பலவாணர் கந்தையா

[அனலைதீவு 6ஆம் வட்டாரம்]

எங்கள் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்தீர்களே! நாம் என்றும் உங்களை நினைந்தே துயர் உருகுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

அனலைதீவு,
6 ஆம் வட்டாரம்.

[16228]

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 07 — 1905
மறைவு: 23 — 03 — 1986
திதி: 27 — 03 — 1991



### அமரர் கனகம்மா விசுவலிங்கம்

அன்பு அம்மா! எத்தனை கோடி ஆண்டுகள் சென்றாலும் எங்கள் உள்ளத்தில் ஒளி வீசும் உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தை விட்டகலா!

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வி. மகாலிங்கம்,
267, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[3895]

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 07-12 1957
உதிர்வு: 14-03-1984
திதி: 27-3-1991



### அமரர் ஐயம்பிள்ளை ஜெயக்குமார்

[தொழில் நுட்பவியலாளர், முல்லைத்தீவு உள்ளூராட்சித் திணைக்களம்]

அன்பு மகனே! அருமை அண்ணாவே! உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

கண்டாவளை.

[14928]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.03.1991

பக்கம் - 3

# உதயன்

## தவறை உணருகிறதா?

இனப்பிரசினைக்கான தனது சொந்தத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

இனப்பிரச்சினை நாட்டின் மிக முக்கிய பிரச்சினை. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல், வெந்துகொண்டிருக்கும் பிரச்சினை. அதனைத் தீர்த்து வைத்து நாட்டில் உயிர் அழிவையும், உடைமை நாசத்தையும் தவிர்க்க வேண்டுமானால் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தனது தீர்வு-திட்டம்- எது என்பதை முன்வைக்க வேண்டியது அவசியம்.

அப்போதுதான் பாதிக்கப்பட்ட தரப்பார் தமது அபிலாஷைகளைத் தீர்க்கும் விதத்தில் அரசின் தீர்வு அமைந்துள்ளதா, ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள முடியுமா, திருப்திகரமானதா, தமக்கு ஒவ்வாததா என்ற முடிவுக்கு வரமுடியும்.

இனப்பிரச்சினையை இராணுவத் தீர்வால் அன்றிப் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு உள்ளார்த்தமாகவே விரும்பினால், அது முதலில், தீர்வுக்குரிய தனது சொந்தத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அது ஓர் அடிப்படைத் தேவை என்பதை இந்தப் பத்தியில் அடிக்கடி எடுத்துரைத்து வந்தோம்.

ஆனால் அரசாங்கம் இவ்விடயத்தில் இதுநாள் வரையில் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து, ஒளித்து விளையாடிக் கொண்டு வந்தது. காலத்தைக் கடத்தும் உள்நோக்கத்துடன், சர்வகட்சி மாநாடு என்றும், அதுவென்றும், இதுவென்றும் உரிய அக்கறை காட்டாதிருந்தது. முஸ்லிம் கட்சிகள், தமிழ்க் கட்சிகள் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண்டு வாருங்கள் என்று தனது பொறுப்பை மற்றவர் தலையில் போட்டு ஏய்க்காட்டியது.

தீர்வுக்கெனத் தான் ஒரு திட்டத்தை அறிவிக்காமல் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திட்டம் என்ன என்று கேள்வி எழுப்பி வந்தது ஆனால் சுதந்திரக் கட்சியோ, அரசாங்கத்தின் சொந்தத் தீர்வுஎன்னவென்று அது அறிவித்தால் மட்டுமே, தனது திட்டத்தை வெளிப்படுத்த முடியும் என்று கூறியது.

ஒருவரது திட்டத்தை அடுத்தவர் குறை கூறி - தமிழர்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டதாகக் கூறி - சிங்கள மக்களிடையே அரசியல் லாபம் தேடுவதே இரு சாராரும் ஒளிந்து மறைந்து, கண்ணாமூச்சி ஆடுவதற்கான சரியான காரணம்.

தீர்வுக்குரிய சொந்தத் திட்டத்தை முன் வைக்கும் பொறுப்பிலிருந்து இனியும் நழுவமுடியாது என்பதையும், தொடர்ந்து கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்க முடியாது என்பதையும் காலம் பிந்தியாவது அரசு உணர்ந்திருக்கிறது. தான் இதுவரை விட்ட தவறை உணர்ந்திருக்கிறது. அதனையே இப்போதைய முயற்சி எடுத்துக் காட்டுகிறது!

அரசின் திட்டம் வெளியிடப்பட்டால்தான் தீர்வுக்கான பாதை சீரானதாக இருக்குமா அல்லது கரடு முரடானதாக இருக்குமா அல்லது இருப்பதை விட மேலும் சீர் கெட்டு விடுமா என்பது தெரிய வரும்.

எனினும், தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்கும் கட்டமைப்பு இல்லாத எந்தத் தீர்வையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை என்பதை அரசு இதுவரை உணர்ந்திருக்கும் என்று நம்புகிறோம்.

# பட்டதாரி பயிற்சி ஆசிரியருக்கு

# ரூ. 300 மேலதிக அலவன்ஸ்

கொழும்பு, மார்ச் 27

பட்டதாரி பயிற்சி ஆசிரியருக்கு மாதம் 300 ரூபாவை மேலதிக அலவன்ஸாக, சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து வழங்குவது என்று அரசு தீர்மானித்து உள்ளது.

இதனால் 7,000 பட்டதாரி பயிற்சி ஆசிரியர்கள் நன்மை அடைவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பட்டதாரி பயிற்சி ஆசிரியர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் மாதம் 150 ரூபா அலவன்ஸாக வழங்கப்பட்டு வந்தது,

பட்டதாரி பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற்ற நாள் தொடக்கம் மாதம் ஆயிரத்து 750 ரூபா வேதனமாக வழங்கப்பட்டு வருகிறது.

300 ரூபா மேலதிக அலவன்ஸுடன், பட்டதாரி பயிற்சி ஆசிரியர் பெறும் வேதனத்தின் முழுத்தொகை 2050 ரூபா ஆக இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## அன்னை பூபதி நினைவாக தென்மராட்சியில் பந்தல்கள்

தென்மராட்சி, மார்ச் 27

அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் மூன்றாம் ஆண்டு நினைவையொட்டி தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதியின் சகல இடங்களிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப் பந்தல்களில் அன்னை பூபதியின் படங்கள் வைக்கப்பட்டு மங்கல தீபங்கள் ஏற்றப்படுகின்றன. [இ-117]

## செங்கதிருக்கு அஞ்சலி

சாவகச்சேரி, மார்ச். 27

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளரும், செயற்குழு உறுப்பினருமான மேஜர் செங்கதிர் [நடேசு றஞ்சித் வரதராசா], வீரவேங்கை சிந்து ஆகியோரின் 30 ஆம் நாள் நினைவு அஞ்சலிக் கூட்டம் திங்களன்று மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

வட்ட அவைத் தலைவர் திரு. செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு. பரா, கலை, கலாசாரப் பொறுப்பாளர் திரு. சிட்டு உட்பட த. வி. பு. ம. மு. முக்கியஸ்தர்கள் பலர் உரை நிகழ்த்தினர். [இ-31]

## தெல்லிப்பளை உ. அ. அ. பிரிவில் தமிழீழ மீட்பு நிதி திரட்ட ஒழுங்கு

தமிழீழமீட்பு நிதி செலுத்த ஒப்புதலளித்த தெல்லிப்பளை உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பங்களிக்க விரும்புவோர் சிற்றூரவைகளினால் அவர்களுக்கென அறிவிக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் தமது பங்களிப்பைச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்வோர் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கும், பிற்பகல் 2.00 மணிக்கும் இடையில் தெல்லிப்பளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். [இ]

## பல்கலைக்கழக அனுமதியில் இந்து - ஹாட்லி சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 27

அண்மையில் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில்— யாழ்ப்பாண மாவட்டத்தில் பொறியியல் துறைக்குப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்தும் —

மருத்துவத்துறைக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இருந்தும் மிக அதிகமான மாணவர்கள் — அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரியிலிருந்து மொத்தம் 32 மாணவர்கள் பொறியியல் துறைக்கு அனுமதி பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

அதேவேளை யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து 16 மாணவர்கள் வைத்தியத் துறைக்கு அனுமதிபெறத் தகுதி அடைந்துள்ளனர்.

யாழ் இந்துவில் இருந்து பொறியியல் துறைக்கு 19 பேரும், ஹாட்லிக் கல்லூரியிலிருந்துமருத்துவத்துறைக்கு 9 பேரும் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலிருந்து 10 பேர் பொறியியல் துறைக்கும், 10 பேர் மருத்துவத்துறைக்கும் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளார்கள்.

பொறியியல், மருத்துவம் உட்பட சகல துறைகளிலும் யாழ். இந்துக் கல்லூரியில் இருந்து மொத்தம் 79 மாணவர்களும் ஹாட்லி கல்லூரியில் இருந்து மொத்தம் [illegible] வர்களும் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ் பரியோவான் கல்லூரியில் இருந்து மொத்தம் 41 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து மொத்தம் 49 பேர் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் 9 பேர் மருத்துவத்துறைக்கும், 2 பேர் பொறியியல்துறைக்கும், 7 பேர் உயிரியல் விஞ்ஞானப் பிரிவுக்கும் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கையில் கணிதப் பிரிவில் ஆகக் கூடுதலான 366 புள்ளிகளை ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். ஆனந்தகுமாரும், வர்த்தகப் பிரிவில் ஆகக் கூடுதலான 312 புள்ளிகளை அதேகல்லூரியைச் சேர்ந்த செல்வன் வே. உதயமோகனும் பெற்றுள்ளனர்

அத்துடன் பொறியியல் பீடத்துக்கு லண்டன் கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்துக்கு ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் எஸ். ஆனந்தகுமாரும்—

மருத்துவ பீடத்திற்கு அதே கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ராதன் மார்க்கண்டு, செல்வன் எஸ். பூபாலன் ஆகியோர் அவுஸ்திரேலிய பல்கலைக் கழகத்திற்கும்—புலமைப் பரிசில் பெற்றுச் செல்கின்றனர்.

யாழ். இந்துக்கல்லூரியைப் பொறுத்தவரையில் இதுவரை பொறியியல் துறையில் இக் [illegible] ஈதனை தற்போது மருத்துவத் துறைக்குச் சென்றுள்ளது. [அ-இ-118-72]

## லொறி- மாட்டுவண்டி விபத்தில் மாடு பலி

அராலி, மார்ச் 27

விறகு ஏற்றச் சென்ற மாட்டுவண்டியை லொறி ஒன்று மோதியது. இதனால் வண்டில் மாடு ஒன்று அதே இடத்தில் துடி துடித்து இறந்தது.

இந்தச் சம்பவம் சித்தன் கேணிச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றது [இ 12]

## அக்கரைப்பற்றில் பதற்றம் நீடிப்பு

அக்கரைப்பற்று மீன்சந்தையில் கடந்த ஞாயிறு காலை ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, அப்பகுதியில் ஏற்பட்ட பதற்றநிலைஇன்னும் நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறையில் நான்குபேர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றுச் சம்பவ எதிரொலியாகவே இது கருதப்படுகிறது. [இ-எ]

## அலவன்ஸ் இல்லை

புதுக்குடியிருப்பு. மார்ச் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் பிரதேச சபை ஊழியர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்கப்படவில்லை. [இ-126]

## பங்குனி உத்தர திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத் திருநாளாகும்.

அன்றைய தினம் சில ஆலயங்களில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பிப்பதோடு சில ஆலயங்களில் தேர்த்திருவிழாவும் சில ஆலயங்களில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற உள்ளன.

மருதடி விநாயகர் ஆலயத்தில் வெள்ளியன்று கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி, பிரசோற்பதி புதுவருடப் பிறப்பான ஏப்ரல் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும்.

நல்லூர் கைலாசநாதர் பிள்ளையார் கோவில் சிவனுக்கு தீர்த்தத் திருவிழாவும், சங்கரத்தைப் பத்திரகாளி ஆலயத்தில் பங்குனி உத்தரத்தன்று தேர்த் திருவிழா நடைபெறுகின்றன.

அன்றைய தினம் கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயத்தில் சங்காபிஷேகமும், திருவிளக்குப் பூசையும் இடம்பெற உள்ளன.

இதேவேளை சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பொங்கலில் இரண்டாம் பொங்கல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை [2-4-91] நடைபெற உள்ளது [அ-90]

## மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, மார்ச் 27

மன்னார் மாவட்டத்தில் முசலி மற்றும் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. [இ-எ]

## நோயாளர் மீண்டும் அனுமதி

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இம்மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீண்டும் நோயாளர்கள் வார்ட்டில் அனுமதிக்கப்படுகின்றனர்.

சில திருத்த வேலைகள் காரணமாக மனநோயாளிகளையும், பிரசவத் தாய்மார்களையும் தவிர ஏனைய நோயாளர்களை வார்ட்டில் அனுமதிப்பது சில வாரங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [இ-100]

## அமெ. படைகளைக் குறைக்க சோவியத் கோருகிறது

மாஸ்கோ, மார்ச் 27

வளைகுடாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையை கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் இருந்த அளவாகக் குறைக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி குவைத்தை ஈராக் இராணுவம் ஆக்கிரமித்தது.

அதன் பின்னரே அமெரிக்கா தலைமையில் லட்சக்கணக்கான நேச நாட்டுப் படையினர் வளைகுடாப் பிராந்தியத்தில் குவிக்கப்பட்டன.

வளைகுடாவில் அமைதி ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட ஐ. நாவின் அமைதிகாக்கும் படை அங்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் சோவியத் யூனியன் யோசனை கூறியுள்ளது. [இ-எ]

## ஈராக்கின் மற்றும் ஒரு நகர் குர்டிஷ் கட்டுப்பாட்டில்

தெஹ்ரான், மார்ச் 27

ஈராக்கின் வடக்குப் பகுதியில் எண்ணெய் வளம் நிறைந்த கிர்கூர் பகுதியை குர்டிஷ் இனப் போராளிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டனர் என்பதை அமெரிக்கா நேற்று ஊர்ஜிதம் செய்தது.

இதேவேளை— கிர்கூக் பகுதியில் உள்ள குர்டிஷ் இனப் போராளிகளின் நிலைகள் மீது ஈராக் போர் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## உலக சனத்தொகையில் 16 சதவீதம் இந்தியாவில்

புதுடில்லி, மார்ச் 27

உலக சனத்தொகையில் 16 சத வீதமானோர் இந்தியாவில் வாழ்கின்றனர் என்பது அண்மையில் நடத்தப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

பம்பாய் நகரில் ஒரு கோடி 25 லட்சம் மக்களும், கல்கத்தாவில் ஒரு கோடி 8 லட்சம் பேரும், புதுடில்லியில் 83 லட்சம் பேரும் வசித்து வருகின்றனர். [இ - எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீப்பிடித்த வீட்டிலிருந்த

# அடுத்தவரைக் காப்பாற்ற முயன்ற மூவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

தீப்பற்றிய வீட்டில் இருந்தவர்களைக் காப்பாற்ற முயன்று எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூவர் நேற்று அங்கு மரணமானார்கள்.

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து வந்த அண்ணாமலை ஸ்ரீகாந்தன் [வயது 22], ஆனையிறவில் இருந்து இடம்பெயர்ந்திருந்த பொன்னன் கிருஷ்ணபாலன் [பொன்னுத்தம்பி—வயது 28], சாவகச்சேரியைச் சேர்ந்த இரு குழந்தைகளின் தந்தையான தவசி இரகு [வயது 27] ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

சாவகச்சேரி—கச்சாய் வீதியில் வீடு ஒன்று தீப்பற்றி எரிந்த வேளையில்—வீட்டில் இருந்தவர்களை காப்பாற்ற முற்பட்டபோதே கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த மூவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகினர். [இது சம்பந்தமான செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது:]

குப்பி விளக்கு மூலமே தற்செயலாக வீடு தீப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

[ஒ-117]

### கைதான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பலரிடம் 12 லட்சம் ரூபா வரை பணம் திரட்டியிருந்தார் என்று திரு. பெர்னாண்டோ புள்ளே பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார்.

[உ-எ]


## இடமாற்றம்

டாக்டர் G. குமரேந்திரன் அவர்களின் மருத்துவமனை தற்போது 189 குருசோல்ற் றோட் (பெரிய மாதா கோவிலுக்கு அண்மையில்) இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

[16223] - டாக்டர் G. குமரேந்திரன்



## மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்

### 11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

எமது கிளை அலுவலகம் மீண்டும் 01-04-91 திங்கட்கிழமை தொடக்கம் திறக்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அலுவலக நேரம்: காலை 9மணி முதல் நண்பகல் 12மணி வரை

[16206] - கிளை முகாமையாளர்.



கலங்கிய கண்களுடன் ..........

## பேராசிரியர் சோ. கந்தையா

அவர்கட்கு எமது

## இதய அஞ்சலிகள்

தேசத்தை உயிராய்
நேசித்ததாலோ
தெருவிலே உங்கள் உயிர்
மரித்துப் போனது ...... ?

உங்கள் வழி காட்டலை இழந்து நிற்கும்
உயிரியல் விஞ்ஞான பீட மாணவர்கள்
— 3ஆம் வருடம் —

[15938]



## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர் அமரர் சோ. கந்தையா

B Sc. (Hons.), Ph. D (London)

[பீடாதிபதி, விவசாயபீடம், யாழ். பல்கலைக் கழகம்]



தோற்றம்:
09 - 09 - 1936

மறைவு:
23 - 03 - 1991

இம் மண்ணைப்
பொன் விளையும் பூமியதாய் மாற்றுதற்கு,
உழைத்துழைத்து
மண்ணிற்கே உரமானீர்.

இதயம் துயர் நிறையும் வேளையிலும்
உறுதி கொள்வோம்:
நாம் தொடர்வோம், உமது பணி

- விவசாயபீடம்
கிளிநொச்சி.

[16231]


## மாலி ஜனாதிபதி கைதானார்

பமாகோ, மார்ச் 27

மேற்கு ஆபிரிக்க நாடான மாலி (Mali) யின் ஜனாதிபதி மோஸாட்ராரோ அரசுப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

மாலியின் தலைநகர் பமாகோ, படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மோஸா 1968 இல புரட்சிச் சதி ஒன்றின் மூலம் ஆட்சியைப் பிடித்திருந்தார்.

மாலியின் அதிகாரப் பொறுப்பைத் தாம் ஏற்றிருப்பதாக ஆயுதப் படையினரும் பொலீஸாரும் அறிவித்துள்ளனர். [ஒ-எ]

## வர்த்தக ஊழியர் சங்கத்தின் அலுவலகம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தின் அலுவலகம் யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இயங்கி வருகிறது எனச் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். மநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக ஊழியர்களையும் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் திரு. சி. குமாரலிங்கம் கேட்டுள்ளார். [ஒ]

## 7 அப்பாவி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுற்றிவளைத்த இராணுவத்தினர் 5 பொதுமக்களை சுட்டுக் கொன்றனர்.

பூநகர், ஈச்சிலம்பத்தை வாசிகளான திருமதி தம்பிராசா தெய்வானை [50 வயது], கதிர்காமத்தம்பி வீரசிங்கம் [38 வயது], அவரது மனைவி தேவகி [30 வயது] மற்றும் புண்ணியமூர்த்தி ராஜேஸ்வரி [40 வயது வெருகல், மூகத்துவாரம்], கணபதிப்பிள்ளை மயில்வாகனம் [67 வயது - மாவடிச்சேனை] ஆகியோரே உயிரிழந்த ஐவரும் ஆவர்.

கடந்த 14 ஆம் திகதி மட்டக்களப்பு கடற்கரையில் வைத்து அன்ரனி நாகம்மா [37 வயது - உப்பூறல்], பொன்னையா இரத்தினம் [28 வயது - வெருகல்] ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். [ஒ]

## செயலகத்துக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வந்த விளக்குடன் பதிவாளர் அலுவலகத்துக்கு விரைந்தார்.

அவர் இவ்வளவு சிரமப்பட்டு பட்டப் பகல நேரத்தில் விளக்குடன் வந்தது ஏன் தெரியுமா?

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உண்மைப் பிரதிக்கு யாழ் பதிவாளர் அலுவலகத்துக்கு விண்ணப்பித்தவர்களில் அவரும் ஒருவர். பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி அவருக்கு அவசரமாகத் தேவைப்பட்டது.

பல நாட்கள் சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு அலைந்தார். அது கிடைக்கவில்லை. அதற்கான காரணம் என்ன என்று கேட்டார்.

பிறப்புப் பதிவுப் புத்தகங்கள், மற்றும் கோவைகள் வைக்கப்பட்டிருக்கும் அறை கும்மிருட்டாக இருப்பதால் அவரின் பிறப்புப் பதிவுப் படிவத்தையும் பெறமுடியாமல் இருப்பதாகக் காரணம் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே அவர் விளக்குடன் வந்தார். ஊழியர்களிடம் அதனைக் கொளுத்திக் கொடுத்துத் தமது பிறப்புப் பத்திரப் பிரதியைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாகச் சென்றார்! [அ-5]

# கொழும்புத் துறைமுகத்தில் மோ. குண்டுகளுடன் கப்பல்!

## இரகசிய பொலீஸார் விசாரணை

கொழும்பு, மார்ச் 2

மோட்டார் குண்டுகளுடன் கூடிய நூறு பெட்டிகளுடன் கொழும்புத் துறைமுகத்தைச் சென்றடைந்த பெல்ஜியம் கப்பல் ஒன்று தொடர்பாக இரகசியப் பொலீஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சீனா செல்லும் வழியில் அக்கப்பல் கொழும்புத் துறைமுகம் வந்தடைந்ததாகவும் அக்கப்பலில் இருந்த மோட்டர் குண்டுகள் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்க கப்பலின் உள்ளூர் ஏஜண்ட் தவறி விட்டார் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் கப்பல் கப்டன் வெடிகுண்டுகள் பற்றிய தகவலை சுங்க அதிகாரிகளிடம் தெரிவித்திருந்தார்.

யாருக்காக யார் இந்த மோட்டார் குண்டுகளைத் தருவித்தார் என்பது பற்றியே விசாரணை நடத்தப்படுகிறது என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஒ-எ]

## பஹ்ரைனில் அமெரிக்க இராணுவப் பிரிவு

வாஷிங்டன், மார்ச் 27

வளைகுடாவில் அமெரிக்க இராணுவப் பிரிவு ஒன்றை நிரந்தரமாக வைக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்த இராணுவப் பிரிவின் தலைமையகத்தை பஹ்ரைனில் அமைக்க உடன்பாடு காணப்பட்டுள்ளது.

[ஒ-எ]

## மன்னார் ஆயர்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்ற மறை மாவட்டக் குருக்களின் கூட்டத்தில் 56 குருக்கள் கலந்து கொண்டனர்.

ஆயருக்கு நடந்த சம்பவத்தையிட்டு பலரும் கவலையும் கண்டனமும் தெரிவித்துப் பேசினர். அவற்றின் தொகுப்பு தீர்மானமாக கடித மூலம் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவருக்குக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது

இம்மாதம் 16 ஆம் திகதி ஆயர் அதி. வந் தோமஸ் சௌந்தரநாயகம் வவுனியாவில் வைத்துப் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்முறைகள் படிப்படியாக வளர்ந்து, கத்தோலிக்க திருச்சபை ஆயரையே, இலங்கை ஆயர் பேரவையின் தலைத் தலைவரையே தாக்குகிற அளவுக்கு நிலைமை வந்துள்ளது குறித்து ஆழ்ந்த கவலையும், மனவருத்தமும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சம்பவத்தை ஒரு தனிப்பட்ட விடயமாகக் கருதாமல், குற்றம் இழைக்காத அப்பாவிப் பொது மக்கள் மீது படையினர் இழைக்கும் இன்னல்களுக்கு, துன்பத்திற்கு ஓர் உதாரணமாகவும் எடுத்துக்கொள்வீர்கள் என்றும் நம்புகிறோம். — அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் கூட்டத் கலந்து கொண்ட ஐம்பத்தாறு குருமாரும் கையெழுத்திட்டுள்ளனர்.

[அ-51]


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் சண்முகராஜா

திரு. மயில்வாகனம் சண்முகராஜா 26-3-1991 இல் காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும் பஞ்சாட்சரம், கஜேந்திரன், உதயகுமார், சந்திரசேகர், சந்திரகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் விமலதேவி, இராசலட்சுமி, ராணி, விஜயராணி, ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27-3-1991 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

359, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

கஜேந்திரன் [மகன்]

[16233]

### திருமதி நாகலிங்கம் சின்னம்மா

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் சின்னம்மா காலமானார்.

இவர் பொன்னையா - செல்லம்மாவின் அன்பு மகளும், நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உலநாதன், லெட்சுமி, தம்பிராசா, சண்முகம், சரஸ்வதி, கனகரெத்தினம், தெய்வேந்திரம், காலஞ்சென்ற பரமசாமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஐஸ்வரி, துரைராஜா, மகேஸ்வரி, புனிதவதி, கனகரெத்தினம், செல்வராணி, தனலெட்சுமி, மங்கையர்க்கரசி, சிறிசந்திரன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தம்பிப்பிள்ளை, காசிப்பிள்ளை, அருளம்பலம், சுந்தரம்பிள்ளை, தங்கமுத்து, வேலாயுதம்பிள்ளை, பொன்னம்மா, நல்லதங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புதன்கிழமை [27-3-91] இன்று காலை 10-00 மணிக்கு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

நா. கனகரெத்தினம்

[16230]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிரைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org